திரு. வி. பழனிவேலு : ஆத்தூர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் 1969-70-ம் ஆண்டில் நெல் லெவி கொள்முதல் செய்யப்பட்டதில் லட்சக்கணக்கான ரூபாய் மோசடி செய்யப்பட்டிருக்கிறது. அது 1971-72-ல் கண்டுபிடிக்கப்பட்டது. அந்த நடவடிக்கை என்னவாயிற்று ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தனியாகக் கேள்வி கேட்க வேண்டும்.

திரு. செ. அரங்கநாயகம் : கூட்டுறவு சம்பந்தப்பட்ட வழக்குகளில் நிறைய டாக்குமென்டரி எவிடென்ஸ் இருக்கும் காரணத்தால் ஒரே பப்ளிக் பிராசிக்யூட்டர் இருந்து எல்லா வழக்குகளையும் போட காலதாமதம் ஆகிறது. ஆகவே, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இன்னொரு பப்ளிக் பிராசிக்யூட்டரைப் போட அரசாங்கத்தில் யோசனை இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எங்கெங்கு வழக்குகள் அதிகமாக இருக்கின்றனவோ அங்கு ஸ்பெஷல் ஏ.பி.பி. போட ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

THIRU B. VENKATASWAMY : Sir, in most of the cases, some lakhs and lakhs of rupees are being misappropriated and the persons concerned go to other States and live there. They do it want only and intentionally. May I know from the Hon. Minister whether he will take preventive steps to stop this sort of thing?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வேறு மாநிலத்திற்குப் போனாலும் நாம் விட வேண்டிய அவசியம் இல்லை. அந்த மாநிலக் காவல்துறை உதவியோடு நடவடிக்கை எடுக்க வாய்ப்பு இருக்கிறது. அப்படிப்பட்ட வழக்கு இருந்து கவனத்திற்குக் கொண்டுவரப்படுமானால் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : சிறப்பு அதிகாரி மாவட்ட போலீஸ் அதிகாரியினுடைய கண்காணிப்பில் இருக்கிறார்களா அல்லது மாவட்ட பதிவாளர் கண்காணிப்பில் இருக்கிறார்களா ? அவர்கள் நேரடித் தொடர்பு யாரோடு கொள்ள வேண்டுமென்று ஏதாவது விதிமுறைகள் இருக்கின்றனவா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாநிலம் முழுவதற்கும் சேர்ந்து ஒரு எஸ். பி. இருக்கிறார். அவர் இங்கு தலைமைச் செயலகத்தில் செயல்படுகிறார். ஆங்காங்கு, தனிப்பட்ட ஒரு கூட்டுறவுச் சங்கத்தில் தவறு நடந்திருக்குமானால்